# பணிநிறைவு வாழ்த்து!

நாள்:31-08-2022

திருமதி **மாலினி பாலாஜி**



சுங்கத்தின் கதவுகளில் தமிழொலிக்க,
சுகமாக நாங்கள் தேடியபோது,
தங்கமென எங்களோடு கரம் கோத்த,
தரணிபுகழ் கைகள் பலவுண்டு,
எங்களின் சுமை குறைத்து,
எழுந்து துணை நின்றோரும்,
தங்களின் எழுத்தாலே நாளும்
தகவுடன் சீரிட்டோரு மாக,

எங்கள் பணி இடையறாது நடந்து,
எழுந்த ஓர் காலம் பத்தாண்டு,
வங்கக் கடலும் எங்களுடன்,
வகுத்துப் பணி செய்ய,
சிங்கமாய் வந்ததெங்கள்சீர்
**சுங்கமுரசு** எனும் இதழே!
அங்கையாய் எங்களுடன் நிறைந்து,
அழகுதமிழ் செய்தவர் **மாலினி!**

தங்கடமை முடிந்ததென அகவை,
தயங்காமல் சொல்ல பணிநிறைவு!
சுங்கத்தின் நினைவுகளைச் சுமந்து,
சுவையாக உறவுகளில் பேசி,
சுங்க முரசொலித்த சுவைப் பயணம்,
சுகமாக மனத்தில் தேங்க,
தங்கும் பிணியின்றித் தார்மீக,
பெருமையுடன் வாழ்க நிறைந்து!
அன்புடன்,
**_ கு.ப. அசோகன்,**
30-08-2022

